11.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயத்துக்காக தாமிரவருணி தண்ணீரைத் திறக்க வேண்டும்: மு.க.ஸ்டாலின்**

தூத்துக்குடி மாவட்ட மக்களின் விவசாயத்துக்காக தாமிரவருணி தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று, திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார். இதுதொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: மாநிலத்தில் உள்ள விவசாயிகளை அதிமுக அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. கார் பட்டத்தில் சாகுபடி செய்வதற்குத் தேவையான தண்ணீரை தாமிரவருணி அணையில் இருந்து திறந்துவிடுமாறு தூத்துக்குடியில் உள்ள தாமிரவருணி ஆற்றுப் பாதுகாப்பு கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. கார் பட்டம் 9 தினங்களுக்கு முன்பே தொடங்கி விட்ட போதிலும், பாசனத்துக்குரிய தண்ணீர் திறந்து விடப்படாததால் நெல் சாகுபடிக்குப் போதிய தண்ணீர் இல்லாமல் தவிக்கிறார்கள். தாமிரவருணி அணையில் 21,113 ஏக்கர் நிலங்களுக்கு நீர்பாசனத்துக்குத் தேவையான தண்ணீர் இருந்தாலும், 8,124 ஏக்கர் பாசனத்துக்கு மட்டுமே மாநில அரசு தண்ணீர் திறந்து விட்டிருக்கிறது. எனவே, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கார் பட்டத்தில் விவசாயம் செய்வதற்கு வசதியாக தாமிரவருணியில் இருந்து உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும். தாமிரவருணி-கருமேனி-நம்பியாறு இணைக்கும் திட்டப் பணிகளையும் விரைவுபடுத்த வேண்டும் என்றார்.

**தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும்**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வியாழக்கிழமையும் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். கடந்த 24 மணி நேரத்தில், புதுக்கோட்டையில் 50 மி.மீ, திருவள்ளூர் மாவட்டம் திருவேலங்காடு, பள்ளிப்பட்டு, பூந்தமல்லி, வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம், வேலூரில் 40 மி.மீ, சோளிங்கர், அரக்கோணம், மதுரை தெற்கு, பூண்டி ஆகிய இடங்களில் தலா 30 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தமட்டில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 97, 82 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். பாளையங்கோட்டையில் 102 டிகிரி... தமிழகத்தில் புதன்கிழமை அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் 102 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக, சென்னையில் 101-ம், நாகையில் 100-ம், தருமபுரி, திருச்சியில் 99-ம், கடலூரில் 98-ம், மதுரையில் 97-ம், வேலூரில் 96 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு பயிற்சி**

தேவாரத்தில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் தோட்டக்கலைத்துறை சார்பில் நடத்தப்பட்டது. தேனி மாவட்டத்தில் இயற்கை வேளாண் முறைகளை கையாள வலியுறுத்தி தேனி மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. முகாமை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் கே.செந்தில்குமார் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர்கள் எஸ்.பாண்டியன், கா.பாலு, க.சிவக்குமார் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

முகாமில் பூச்சி மருந்துகளை தவிர்த்து விவசாயத்தை பெருக்கும் வழிகள் குறித்தும், தவிர்க்க முடியாத நேரங்களில் விவசாய பயிர்களில் இளம் பருவத்தில் மட்டும் பூச்சி மருந்துகளை பயன்படுத்த வேண்டும் என்றும், மகசூல் எடுக்கும் நேரங்களில் பூச்சி மருந்துகளை அறவே தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

**தேனி மாவட்டத்தில் உற்பத்தி அதிகரிப்பு: வைகை அணையில் மீன்விலை குறைக்கப்படுமா?**

தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து கண்மாய்கள் நிரம்பி மீன்உற்பத்தி அதிகரித்துள்ளதால், வைகை அணையில் மீன்களின் விலையைக் குறைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் கோடை மழை பெய்ததால் ஆறுகளில் தண்ணீர் வரத்து இருந்தது. இதனால், கண்மாய்களில் தண்ணீர் நிரம்பியுள்ளன. பெரும்பாலான கண்மாய்களில் ரோகு, கட்லா, மிருகால் மற்றும் திலேபியா ஆகிய மீன்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. இவ்வகை மீன்கள் தற்போது பிடிப்பதற்கு ஏற்ற ரகத்தில் உள்ளன. இதனால் பெரும்பாலான

கண்மாய்களில் மீன்களைப் பிடித்து விற்று வருகின்றனர். இந்த மீன்கள் கிலோ ரூ.50 என கண்மாய் குத்தகைதாரர்களால் விற்கப்பட்டு வருகின்றன. வைகை அணையில் கடந்த வருடம் ரோகு, கட்லா மற்றும் திலேபியா ஆகிய ரக மீன்குஞ்சுகள் விடப்பட்டு, தற்போது பிடிப்பதற்கு தயார் நிலையில் உள்ளன. மேலும் வலையில் தினமும் 150 முதல் 200 கிலோ வரை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இந்த மீன்கள் கிலோ ரூ.120-க்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் இங்கு மீன்கள் வாங்குவதை பெரும்பாலானோர் தவிர்த்து வருகின்றனர். மற்ற கண்மாய்களைப் போன்று மீன்கள் விலையைக் குறைத்து விற்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து மீன்வளத்துறை உதவி இயக்குநர் பிரபாவதி கூறுகையில், தேனி மாவட்டத்தில் மீன்கள் விலை குறைந்துள்ளது. இது குறித்து பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால், விசாரணை நடத்தி மீன்விலையை குறைக்க மண்டல இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படும் என்றார்.

**எள் விலை சரிவு, நிலக்கடலை விலை உயர்வு**

விருதுநகர், நெல்லை மாவட்டம் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் எள் அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. இந்நிலையில், எள் விலை கடுமையாக சரிவடைந்துள்ளதால், விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர். அதேநேரம், நிலக்கடலை விலை 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு எள்ளுக்கு நல்ல விலை கிடைத்ததால், இந்த ஆண்டு கோடையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் எள் எண்ணெய் வித்து பயிர் சாகுபடியை அதிக அளவில் விவசாயிகள் மேற்கொண்டனர்.

எள் சாகுபடிக்கு பராமரிப்புச் செலவு குறைவு. குறைந்த நாள் பயிர். ஏக்கருக்கு 4 மூட்டை கிடைக்கும் என்பதால், விவசாயிகள் விரும்பி அதிக அளவில் சாகுபடி மேற்கொண்டனர். இரண்டரை மாதங்களுக்கு முன்

பயிர் செய்த எள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இரண்டாம் ரக எள் 75 கிலோ மூட்டை ரூ. 7 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. தற்போது, ரூ. 3 ஆயிரத்துக்கு விற்பனையாகிறது. அதேபோல், கிலோ ரூ. 110-க்கு விற்ற முதல் ரக எள், தற்போது ரூ.75 ஆக சரிவடைந்துள்ளது.

கடந்த மாதம் பெய்த மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி, எள் பயிர்கள் அழுகி விளைச்சல் அளவு குறைந்துள்ளது. இருப்பினும், விலையும் வெகுவாகக் குறைந்து விட்டதால், விவசாயிகள் மிகவும் நஷ்டமடைந்துள்ளனர்.

எள் விலை சரிவால் நல்லெண்ணெய் விலையும் சரிவடைந்துள்ளது. ஒரு லிட்டர் ரூ. 300 முதல் ரூ. 350 வரை விற்றது, தற்போது ரூ. 215 முதல் ரூ. 250ஆக சரிவடைந்துவிட்டது. இந்தாண்டு கல்கத்தா, குஜராத் உள்பட இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் எள் விளைச்சல் அதிகரித்துள்ளது. எனவே, தமிழகத்துக்கு புது எள் வரத்தும் அதிகரித்துவிட்டது. இதனால் எள் விலை சரிவடைந்துள்ளதாக, ராஜபாளையத்தில் எள் அதிகளவில் கொள்முதல் செய்யும் எண்ணெய் ஆலை அதிபர் சுகந்தம் என்.எஸ். ராமகிருஷ்ணன் தெரிவித்தார். அதேநேரம், தமிழகத்தில் மாசி மாதத்தில் கோடையில் நிலக்கடலை அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படும். நிலக்கடலைக்கு அதிக பராமரிப்புத் தேவை. வேலையாள்களும் அதிகம் தேவைப்படுவர்.

தற்போது, தொழிலாளர் பற்றாக்குறையாலும், உழவு செலவு, கூலி உயர்வு போன்றவைகளாலும் நிலக்கடலை சாகுபடி குறைந்து, பருப்பு வரத்தும் குறைந்துவிட்டது. இதனால், நிலக்கடலைப் பருப்பு மூட்டை ரூ. 4,200 ஆக இருந்தது தற்போது ரூ. 6,200 ஆக விலை அதிகரித்துவிட்டது.

**பண்ருட்டி பலாப்பழம் அமோக விற்பனை**

திருப்பூரில், பண்ருட்டி பலாப்பழங்களை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்வதால், அதன் விற்பனை அமோகமாக உள்ளது.

தற்போது, கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் பலாப்பழம் அறுவடை சீசன் என்பதால், அதிகளவிலான பலாப்பழங்களை வியாபாரிகள் மொத்தமாகக் கொள்முதல் செய்து, பல்வேறு ஊர்களுக்கும் விற்பனைக்கு கொண்டுவருகின்றனர்.

இந்நிலையில் திருப்பூர், பல்லடம் சாலை வீரபாண்டி பிரிவில், லாரியில் பண்ருட்டி பலாப்பழங்களை குவித்து வைத்து, விற்பனை செய்து வருகின்றனர். இங்கு, 10 கிலோ எடையுள்ள பழாப்பழம் ரூ. 150 முதல் ரூ. 300 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. பலாப்பழத்தின் அளவைப் பொறுத்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. பலாச்சுளைகள் கிலோ ரூ.30 வரையிலும் விற்பனை ஆகிறது. பொதுமக்கள் ஆர்வத்துடன் பலாப்பழங்களை வாங்கிச் செல்லுவதால், அதன் விற்பனை அமோகமாக இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 75 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 75 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 2,078 மூட்டைகளில் 1,00,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 81-க்கும், அதிகபட்சமாக ரூ. 84.55-க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 46.65-க்கும், அதிகபட்சமாக ரூ. 73.60-க்கும் விற்பனையானது.

இதில், மொத்தம் ரூ. 75 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்

**குன்னூரில் தேயிலை வாரியக் கருத்தரங்கு**

தென்னிந்திய தேயிலை வாரியம் சார்பில், தேயிலை வாரியக் கருத்தரங்கு குன்னூரில் புதன்கிழமை நடைபெற்றது. கூடுதல் செயல் இயக்குநர் ஹரி பிரகாஷ் வரவேற்றார். மேம்பாட்டு அலுவலர் செல்வி பிரபா, தொழிற்சாலை ஆலோசனை அலுவலர் ராகேஸ் டாலுரூ ஆகியோர் 12-ஆவது நிதி திட்டத்தின் கீழ், தேயிலை வாரியம் மூலமாக வழங்கப்படும் மானிய உதவிகள் குறித்துப் பேசினர். முன்னாள் தேயிலை வாரிய துணைத் தலைவர் ரங்கையா, உபாசி சங்கத் தலைவர் ஜெயராம் ஆகியோர் தேயிலைத் தொழிலை மேம்படுத்துவது குறித்துப் பேசினர்.

தொடர்ந்து, தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவாணன் பேசியதாவது: தற்போது தேயிலை மகசூல் அதிகரித்து வருவதால் தேயிலைத் தூளின் தரம் குறைந்துள்ளதாகக் கூறி, வர்த்தகர்கள் ஏல மையங்களில் தேயிலைத் தூள்களை கொள்முதல் செய்ய முன்வருவது இல்லை. எனவே, இதுபோன்ற காலகட்டத்தில் விவசாயிகள் பசுந்தேயிலைகளை அறுவடை செய்து 3 மாதத்திற்கு மட்டும் அதை, தேயிலைச் செடிகளுக்கு உரமாகப் பயன்படுத்த வேண்டும்.

இதன் மூலமாக, விவசாயிகளுக்கு உரமிடும் செலவு குறைவதுடன், பசுந்தேயிலையும் தரமானதாக இருக்கும் என்பதால் விவசாயிகள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மேலும், எஸ்டேட்களில்

தேயிலை மறு நடவு மற்றும் மாற்றி நடவு செய்தலுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 2 தவணைகளில் ரூ. 2 லட்சத்து 48 ஆயிரத்து 56 வழங்கப்படும்.

அதேபோல, தேயிலை புனரமைப்பு, கவாத்து, இடைவெளி நிரப்புதல் ஆகியவற்றிற்கு ரூ. 61,138, புதிதாக தேயிலை நடவு செய்ய ரூ. 1,61,264, இரண்டு தவணைகளில், இயற்கை முறையில் தேயிலை சாகுபடி செய்ய வழக்கமான நடைமுறையை காட்டிலும் கூடுதலாக 25 சதவீதம் மானியம், நீர்ப்பாசன வசதிக்கு ரூ. 80 ஆயிரம், தேயிலை சாகுபடியை இயந்திரமாக்குதல் திட்டத்திற்கு 25 சதவீதம் மானியமும் வழங்கப்படும்.

நீர்ப்பாசன வசதிக்கு ஹெக்டேருக்கு ரூ. 80,000 வழங்கப்படும்.

சிறு விவசாயிகள் சங்கங்களுக்கு 50 சதவீதத்தில் வாகனம், ஹெக்டேருக்கு ரூ. 15,000 வரை சுழல்நிதி, இடுபொருள் சேமிப்பு மையம், அலுவலகத்திற்கு ரூ. 1 லட்சம், பசுந்தேயிலைக் கொள்முதல் நிலையம் அமைக்க ரூ. 50,000, பசுந்தேயிலை அளவுத் தராசு வாங்க ரூ. 3,500, கவாத்து இயந்திரம் வாங்க ரூ. 40,000, கணினி வாங்க ரூ. 40,000 என மத்திய அரசு அறிவித்துள்ள அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என்றார்.

**பசுந்தேயிலை விலைப் பட்டியல் வெளியீடு**

தேயிலை விலை நிர்ணய கமிட்டியின், மாதாந்திர பசுந்தேயிலைக்கு உண்டான விலைப் பட்டியல் புதன்கிழமை வெளியிடப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் 63 ஆயிரம் சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். பசுந்தேயிலை விலை குறைவு காரணமாக விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். மேலும், இதுதொடர்பாக நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்தனர். இதையடுத்து, சந்தை விலைக்கு ஏற்ப பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய, கண்காணிப்பு கமிட்டி அமைத்து அதன் அடிப்படையில் பசுந்தேயிலைக்கு

விலை வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து, தேயிலை வாரியம் தனி கமிட்டி அமைத்து மாதந்தோறும் தேயிலைக்கு விலையை நிர்ணயம் செய்து வந்தது. இந்நிலையில், உற்பத்தியாளர்கள் தரப்பில் இத்திட்டத்தால் பாதிப்பு ஏற்பட்டு வருவதாகக் கூறி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, விலை நிர்ணய கமிட்டிக்கு இடைக்கால தடை பெற்றனர். தற்போது, தொடர்ந்து இந்த வழக்கு நடைபெற்று வரும் நிலையில், மாதந்தோறும் விலை நிர்ணய கண்காணிப்பு கமிட்டியினர் சந்தை விலைக்கு ஏற்ப மாதந்திர விலையை நிர்ணயம் செய்து, அதன் பட்டியலை தேயிலை வாரியம் வெளியிட்டது.

அதன்படி, இந்தாண்டு ஜனவரி ரூ. 12.25, பிப்ரவரி ரூ. 12.68, மார்ச் ரூ. 12.70, ஏப்ரல் ரூ. 12.31 என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள், கமிட்டியினர் நிர்ணயம் செய்துள்ள மேற்கொண்ட தொகையை வழங்க வேண்டும். இனிவரும் காலங்களில் பசுந்தேயிலை விவசாயிகள், தொழிற்சாலைகளுக்கு வழங்கும் பசுந்தேயிலைக்கு உண்டான முறையான கணக்கு ரசீதுகளை பெற்று பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என தேயிலை வாரியம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**"மேகி' நூடுல்ஸ் விற்றால் கடும் நடவடிக்கை: கிருஷ்ணகிரி ஆட்சியர்**

தடையை மீறி, மேகி நூடுல்ஸ் விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று,கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் எச்சரித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மேகி நூடுல்ஸில் ஆரோக்கியத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் வேதிப் பொருள்கள் கலந்துள்ளதால் மேகி நூடுல்ப்ஸ அரசு தடை செய்துள்ளது. இதை பயன்படுத்தினால் தலைவலி, ரத்த சோகை, நெஞ்சுவலி, நரம்பு மண்டலம் பாதிப்பு, பசியின்மை போன்ற பக்க விளைவுகள் ஏற்பட

வாய்ப்புள்ளது. எனவே, மாவட்டத்தில் மேகி நூடுல்ஸ் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும்**

கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்க வேண்டும்; தென்பெண்ணை ஆற்றில் கழிவுநீர் கலப்பதை யாரும் மிகைப்படுத்தக் கூடாது என தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டம், கிருஷ்ணகிரியில் உள்ள அதன் அலுவலகக் கட்டடத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் ஏ.ராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் கே.எம்.ராம கவுண்டர், மாவட்ட மகளிர் அணித் தலைவர் பெருமாகாசி, பொருளாளர் அசோக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக மாநிலம், பெங்களூரின் கழிவுநீர் கலப்பதை யாரும் மிகைப்படுத்தக் கூடாது. குடிநீரைச் சுத்தம் செய்து குடிக்க வேண்டியது நமது கடமையாகும். சுத்திகரித்து குடிநீர் வழங்கும் தொழில்நுட்பம் நம்மிடத்தில் உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதல்போக சாகுபடிக்கு கிருஷ்ணகிரி அணை, கெலவரப்பள்ளி அணை, பாரூர் ஏரி ஆகியவற்றிலிருந்து பாசன நீர் திறந்துவிட வேண்டும். ஜூலை 5-ஆம் தேதி வேலூரில் தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி தலைமையில் நடைபெறும் உழவர் தினப் பேரணி, பொதுக்கூட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி முகாம்**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் வேளாண்மைத் துறை சார்பில் மாநில சமச்சீர் வளர்ச்சி சாமை செயல் விளக்கப் பயிற்சி முகாம் வாழவந்தி கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வீ.பாரதிநாதன் தலைமை வகித்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் துரைராஜ் முன்னிலை வகித்து சிறு, குறு தானியங்களின் முக்கியத்துவம், சிறப்பியல்புகள், சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இதில் ஏற்காடு வட்டார வேளாண்மை துணை அலுவலர் ஜோஸ்வா, செந்தில்குமார், பரமசிவம், சங்கர், பூவரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்ட மானியக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம்**

நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தில் மானியக் கடன் பெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்காலம் என ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் கோழியின மேம்பாட்டுத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்துக்கு நிகழாண்டில் 160 பயனாளிகளுக்குத் தலா ரூ. 1.29 லட்சம் கடன் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டக் கடன் தொகையில், 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், தொழில் முனைவோர், சுய உதவிக் குழுவினர் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம்

விண்ணப்பிக்கலாம். தேர்வுப் பெறுவோருக்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 3 நாள்கள் சிறப்புப் பயிற்சியும், சான்றிதழும் வழங்கப்படும். நாட்டுக் கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஜூன் 30-ம் தேதிக்குள் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**கரூர் மாவட்டத்தில் ரூ. 2 லட்சம் மதிப்பிலான மேகி நூடுல்ஸ் திரும்பப் பெறப்பட்டுள்ளது**

கரூர் மாவட்டத்தில் சில்லரை விற்பனைக் கடைகளிடமிருந்து ரூ. 2 லட்சம் மதிப்பிலான மேகி நூடுல்ஸ் திரும்ப பெறப்பட்டுள்ளதாக கரூர் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் சுரேஷ்பாபு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியது: நெஸ்லே நிறுவனத்தின் மேகி உள்பட பிரபலமான நான்கு வகையான நூடுல்ஸில் சுவையை அளிக்கும் மோனோ சோடியம் குளுட்டாமேட் என்ற ரசாயனப் பொருள், ஈயத்தின் அளவு அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டதில் அவற்றை தமிழகத்தில் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கரூர் மாவட்டத்தில் ஆட்சியர் ச. ஜெயந்தியின் உத்தரவின் பேரில் தற்போது கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சில்லறை விற்பனைக் கடைகளிலும் விநியோகிக்கப்பட்ட நூடுல்ஸ்கள் நான்கு விநியோகஸ்தர்கள் மூலம் திரும்பப் பெறப்பட்டு வருகின்றன. குறிப்பாக, நகர்ப் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடிகளிலிருந்து முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டுள்ளது. மேலும்,கிராமப்புறங்களில் உள்ள கடைகளிலிருந்து இன்னும் மூன்று நாள்களுக்குள் அனைத்து நூடுல்ஸ்களும் திரும்பப் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு விடும். இதுவரையில், மாவட்டத்தில் சுமார் ரூ. 2 லட்சம் மதிப்பிலான நூடுல்ஸ்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்றார்.

**ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் : பாமக கோரிக்கை**

விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் பாமக துணைப் பொதுச் செயலர் கோ. ஆலயமணி.

இதுகுறித்து அவர் தஞ்சாவூரில் ஞானம் நகரில் புதன்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: குறுவைச் சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டும் குறுவை சாகுபடிக்கு ஜூன் 12-ல் தண்ணீர் திறக்கப்படாது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஏற்கெனவே பருவமழை பொய்த்து வருகிறது. இதனால் விவசாயிகள் தொடர்ந்து நலிவடைந்து வருகின்றனர். ஆகையால் விவசாயிகளின் துயர்துடைக்கும் வகையில் நிவாரணமாக ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வழங்க வேண்டும். காவிரிப் பிரச்னையில் அனைத்து தரப்பினரும் ஓரணியாக போராடுகின்றனர். அவர்களுக்கு அம்மாநில அரசும் ஆதரவு தருகிறது. ஆனால் தமிழகத்தில் அப்படி இல்லை. திராவிடக் கட்சிகள் யாரையும் ஒன்றுகூட விடுவதில்லை. காவிரிப் பிரச்னையை யாரும் ஜீவாதாரப் பிரச்னையாக பார்ப்பதில்லை. அரசு நடத்த வேண்டிய போராட்டங்களை விவசாயிகள் நடத்தி வருகின்றனர். அதற்கு அரசு ஆதரவுகூட கொடுப்பதில்லை. மேட்டூர் அணைத் திறக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் பாமக சார்பில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும். தமிழக அரசு கடந்த ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை முடக்கும் வேலையையே செய்து வருகிறது. திராவிடக் கட்சிகள் இலவசங்களைக் கொடுத்து மக்களை சோம்போறி ஆக்கி வருகின்றன. காமராஜர் பள்ளிகள் திறந்து, மதிய உணவு அளித்து கல்விக் கொடுத்தார்.

ஆனால் திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்ததும், கள்ளுக்கடைகளும், மதுக்கடைகளும் திறக்கப்பட்டன. நகரங்களில் மட்டும் இருந்த மதுக்கடைகள் தற்போது கிராமங்களிலும் உள்ளன. இதனால் மக்கள் மதுவுக்கு அடிமைகளாகி வருகின்றனர். கரும்பு வெட்டிய சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய பணத்தை தராமல் நிலுவையில் வைத்துள்ளன. அவற்றை உடனடியாக பட்டுவாடா செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் கோ. ஆலயமணி.

மாநில துணைப் பொதுச் செயலர் எஸ்.எம். மூர்த்தி, உழவர் பேரியக்க மாநில துணைச் செயலர் ஜோதிராஜ், வடக்கு மாவட்டச் செயலர் ரவிச்சந்திரன், மாவட்ட பொருளாளர் மல்லிகாபேகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**சீர்காழி-திருச்சிக்கு அரைவைக்காக வந்த 19,500 நெல் மூட்டைகள்**

நாகை மாவட்டம், சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து அரைவைக்காக 19,500 நெல்மூட்டைகள் ரயில் வேகன்களில் செவ்வாய்க்கிழமை திருச்சிக்கு அனுப்பிவைக்கபட்டன. சீர்காழி வட்டத்தில் சம்பா பருவத்தின்போது சாகுபடி செய்யப்பட்ட நெல்மூட்டைகள் தாலுக்காவில் உள்ள 45 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டன. அவ்வாறு கொள்முதல் செய்யபட்ட நெல்மூட்டைகள் டி.மணல்மேடு, சேந்தங்குடி, எருக்கூர் நவீன அரிசி ஆலை பகுதிகளில் உள்ள சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைக்கபட்டன. இந்த நெல் மூட்டைகள் அரைவைக்காக திருச்சிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. சீர்காழி லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில், சேமிப்பு கிடங்குகளிலிருந்து அரைவைக்கு அனுப்பிவைக்கப்படும் நெல்மூட்டைகளை சீர்காழியிலிருந்து வேகன் மூலம் அனுப்பிவைக்க வேண்டும் எனவும், அவ்வாறு அனுப்புவதன் மூலம் இத்தொழிலை நம்பியுள்ள சுமைதூக்கும்

தொழிலாளர்கள், லாரி உரிமையாளர்கள் குடும்பத்தினர் என 1200 பேர் பலனடைவார்கள் என வலியுறுத்தப்பட்டது. இதையடுத்து, நாகை மாவட்ட முதுநிலை மண்டல மேலாளர் ராதாகிருஷ்ணன் உத்தரவின் பேரில், மயிலாடுதுறை தரக்கட்டுபாடு துணை மேலாளர் கனகசபை, அழகேசன் ஆகியோர் மேற்பார்வையில் சேமிப்பு கிடங்குகளிலிருந்த 19,500 நெல் மூட்டைகள் லாரிகள் மூலம் முதன்முறையாக சீர்காழி ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. பிறகு, அவை ரயில்வேகன்கள் மூலம் திருச்சிக்கு அனுப்பிவைக்கபட்டன.

**"551 விவசாயிகளுக்கு மண்வள அட்டை'**

பெரம்பலூர் மாவட்ட வேளாண் துறையின் நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தின் மூலம் 551 விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றார் வேளாண் இணை இயக்குநர் (பொ) சு. அய்யாசாமி. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேளாண்மைத் துறையின் நடமாடும் மண் பரிசோதனை நிலையத்தின் மூலம் கடந்த 21 ஆம் தேதி முதல் 18 கிராமங்களுக்குச் சென்று மண் மாதிரிகளை சேகரித்து, ஆய்வு செய்து விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை, 1,022 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 551 விவசாயிகளுக்கு மண் ஆய்வு செய்து மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. பயிர் சாகுடி செய்வதற்கு முன்பு, மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து சாகுபடி செய்வதன் மூலம் பயிருக்கு தேவையான அளவு மட்டும் உரத்தை இட்டு சாகுபடி செலவை குறைக்க வாய்ப்பு உள்ளது. குன்னம் வட்டம், துங்கபுரம் கிராமத்தில் வியாழக்கிழமையும் (ஜூன் 11), பெருமத்தூரில் 12 ஆம் தேதி, கீழப்புலியூர் அத்தியூர் மற்றும் அத்தியூர் குடிகாடு ஆகிய பகுதிகளில் 13 ஆம் தேதியும் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்படவுள்ளன.

எனவே, விவசாயிகள் தங்களது வயலில் மண் மாதிரிகளை சேகரித்து கட்டணமாக ரூ. 20 செலுத்தி மண் ஆய்வு செய்து, அதன்படி உரங்கள் இட்டு சாகுபடி செய்து அதிக லாபம் பெற்று பயனடையலாம்.

**தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் உபரிநீரை சேமிக்க பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் திறக்கக் கூடாது**

குமரி மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் திறக்கக்கூடாது என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் முதல் போகமான கன்னிப்பூ சாகுபடிக்காக கடந்த 2 ஆம் தேதி பச்சிப்பாறை அணையும், அதைத்தொடர்ந்து சிற்றாறு மற்றும் பெருஞ்சாணி அணைகளும் திறக்கப்பட்டன.

பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 200 கனஅடி தண்ணீர், சிற்றாறு, பெருஞ்சாணி அணைகளிலிருந்து விநாடிக்கு தலா 100 கனஅடி தண்ணீர் என மொத்தம் விநாடிக்கு 400 கனஅடி தண்ணீர் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளது. நிரம்பிய அணைகள்: இந்நிலையில், கோடை மழை காரணமாக பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் வெள்ள அபாய அளவைக் கடந்து 72 அடியை தாண்டியும், சிற்றாறு அணைகளின் நீர்மட்டம் 17 அடிக்கு அதிகமாகவும் உள்ளன.

இதனிடையே, தென்மேற்குப் பருவமழை விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கும் நிலையில் இந்த அணைகள் நிரம்பி வழியலாம் எனக் கருதப்படுகிறது. அதேவேளையில், தற்போது 40 அடி நீர்மட்டத்தை எட்டியுள்ள பேச்சிப்பாறை அணையானது இப்பருவமழையால் விரைவில் நிரம்பாது எனக் கூறப்படுகிறது. எனவே, மழைநீர் வீணாகாமல் அணைகளில் தேக்கவும், அணைகளிலிருந்து தண்ணீரை உபரியாக வெளியேற்றாமல் தடுக்கவும், பாசனத்துக்காக பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகளிலிருந்து மட்டுமே தண்ணீரை திறக்க வேண்டும்; பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் திறப்பை நிறுத்த வேண்டும்

என விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர். துரிதமாக தூர்வாரும் பணி: இதுகுறித்து முன்னோடி விவசாயி பி. ஹென்றி கூறியதாவது: மாவட்டத்தில் பருவமழை விரைவில் பெய்ய இருக்கும் நிலையில் அணைகளில் அதிகமாக தண்ணீரை தேக்குவதற்கான மேலாண்மை நடவடிக்கைகளை பொதுப்பணித்துறை முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். தற்போது பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளிலிருந்து மட்டுமே பாசனத்திற்கு தண்ணீர் திறக்கவும், பேச்சிப்பாறை அணையை மூடவும் திட்டமிடல் அவசியம்.

மேலும், பாசன கால்வாய்களில் தூர்வாரப்படாததால் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் செல்ல முடியாத நிலை உள்ளது. இதை சரிபடுத்தும் வகையில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**தடை செய்யப்பட்ட துரித உணவுப் பொருள்களை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை: ஆட்சியர்**

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட துரித உணவுப் பொருள்களை விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் ம. ரவிகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நூடுல்ஸ் போன்ற துரித உணவுப் பொருள்களில் ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் அதிகளவு வேதிப் பொருள்கள் கலந்திருப்பது, தமிழக அளவில் எடுக்கப்பட்ட உணவு மாதிரிகளில் கண்டறியப்பட்டது.

அதனடிப்படையில் உணவுப் பாதுகாப்பு ஆணையரின் ஆணையின்படி ஆறு வகையான துரித உணவுகளை தூத்துக்குடி மாவட்டத்தில் தயாரிக்கவோ, இருப்பு வைக்கவோ, விநியோகம் செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ ஜூன் 4 ஆம் தேதி முதல் மூன்று மாதங்கள் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே தடை செய்யப்பட்ட துரித உணவுப் பொருள்களின் தயாரிப்பாளர்கள் தங்களின் விநியோகஸ்தர்கள், இருப்பு வைப்பவர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து உடனடியாக அவற்றை திரும்பப்

பெறும்படி உத்தரவிடப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் ஜெகதீஷ் சந்திரபோஸ் தலைமையில் உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுபோன்ற தடை செய்யப்பட்ட துரித உணவுகளை விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொதுமக்களும், நுகர்வோரும் தடை செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை கண்டறிந்தால் உடனே உணவுப் பாதுகாப்புத் துறைக்கு 0461-2340699 என்ற தொலைபேசி எண்ணில் தகவல் தெரிவிக்கலாம் என்றார் அவர். இதற்கிடையே, தூத்துக்குடியில் பல்வேறு இடங்களில் உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் தலைமையிலான அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு, தடைசெய்யப்பட்ட துரித உணவுப் பொருள்களை பறிமுதல் செய்தனர்.

**அறிவியல் முறையில் நாட்டுக் கோழி வளர்ப்பு பயிற்சி**

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரியில் அறிவியல் முறையில் நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

தமிழக அரசின் பகுதி 2 திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு அறிவியல் முறையில் நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 38 விவசாயிகளுக்கு ராமையன்பட்டியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதன்கிழமை பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இதில், நாட்டுக் கோழியினங்கள், நாட்டுக் கோழி வளர்ப்பு முறைகள், நாட்டுக் கோழிகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விளக்கிக் கூறப்பட்டது. மேலும், செயல்முறைப் பயிற்சியாக செயற்கை புரூடர் அமைத்தல், கோழிப் பண்ணைக் கருவிகளைக் கையாளுதல், தடுப்பூசிகள் அளிக்கும் முறை, கோழிகளுக்கு அலகு வெட்டுதல் ஆகியவையும் கற்றுத்தரப்பட்டன. தொடர்ந்து, பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்களை வழங்கி தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்

துணைவேந்தர் சு. திலகர் பேசியதாவது: கால்நடைப் பண்ணை விவசாயிகளுக்கு திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மூலம் பல்வேறு பயிற்சிகளும், நலத்திட்டங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை சுற்றுவட்டார விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தீவன உற்பத்தி முறை மற்றும் நோய்த்தடுப்பு முறைகளை அறிந்துகொள்வதன் மூலம் குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்ட முடியும் என்றார் அவர். கல்லூரி முதல்வர் சே. பிரதாபன், கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறைத் தலைவர் எட்வின், இணைப் பேராசிரியர் ம. முருகன், கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைத் தலைவர் சி. மணிவண்ணன், உணவியல் துறை உதவிப் பேராசிரியர் ந. அருள்நாதன் ஆகியோர் கால்நடை பராமரிப்பு குறித்து விளக்கிப் பேசினர். இதில், விவசாயிகள், கல்லூரி ஆசிரியர்கள், பணியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

**நெல்லையில் வாட்டி வதைக்கும் வெயில்: இளநீர், குளிர்பானங்கள் விற்பனை அதிகரிப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் கோடையை விஞ்சும் அளவுக்கு கடந்த சில நாள்களாக வெயில் வாட்டி வதைப்பதால் இளநீர், குளிர்பானங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. கோடைக்காலமான ஏப்ரல், மே மாதங்கள் முடிந்து ஜூன் 1ஆம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. வழக்கமாக ஜூன் முதல் வாரத்திலேயே தென்மேற்குப் பருவமழை கேரளத்தில் தீவிரமடைந்து, குற்றால சீசன் தொடங்கும்.

இந்தக் காலத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மிதமான வெயிலும், மாலை நேரங்களில் மிதமான சாரலும் இருக்கும். ஆனால், நிகழாண்டில் ஜூன் 10ஆம் தேதியைக் கடந்துவிட்ட பின்பும் குற்றால சீசன் தொடங்காமல் உள்ளது.

மேலும், கடந்த சில நாள்களாக 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கும் அதிகமான வெப்பம் பாளையங்கோட்டையில் பதிவாகியுள்ளது. கடுமையான வெயிலால் மக்கள் அவதிக்கு ஆளாகியுள்ளனர். நண்பகல் தொடங்கி

பிற்பகல் வரை கடுமையான அனல் காற்று வீசுவதால், இருசக்கர வாகனங்களில் செல்வோர் பெரிதும் களைப்புக்குள்ளாகிறார்கள்.

இதனால், இளநீர், குளிர்பானங்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

இளநீர் தட்டுப்பாடு: இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது: நிகழாண்டில் அக்னி நட்சத்திரத்தின்போது பெரும்பாலான நாள்கள் மிதமான வெயிலும் மழையும் வந்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் இளநீர், குளிர்பானங்களின் விற்பனை மகிழும்படியாக இல்லை.

ஆனால், அந்த நிலை ஜூன் 1ஆம் தேதிக்கு பின்பு மாறியுள்ளது. இப்போது வெயில் மிகவும் அதிகமாக உள்ளதால் இளநீர் தேவை அதிகரித்துள்ளது. சுரண்டை, நாகர்கோவில் பகுதிகளில் இருந்து திருநெல்வேலிக்கு இளநீர் விற்பனைக்காக வருகிறது. தேவை அதிகரித்துள்ளதால் தோட்டங்களில் இருந்து நாங்கள் கேட்கும் அளவுக்கு இளநீர் கிடைக்காத சூழல் உள்ளது என்றார் அவர்.

**தென் மாவட்ட பண்ணையாளர்களுக்காக நடமாடும் கால்நடை நோய் கண்டறியும் ஆய்வகம்**

திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர், விவசாயிகள், பண்ணையாளர்களுக்காக திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடமாடும் நோய் கண்டறியும் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ராமையன்பட்டியில் இயங்கி வருகிறது. தென்மாவட்டங்களைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவரவர் பண்ணை இருப்பிடத்துக்கே சென்று, நோய்ப் பரிசோதன செய்து தகுந்த ஆலோசனைகளை வழங்குவதற்காக இக் கல்லூரிக்கு நடமாடும் நோய் கண்டறியும் ஆய்வக வாகனம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தில், கால்நடைகளுக்கான ரத்த, சிறுநீர் பரிசோதனை, ரத்த உப்பு வகை கண்டறிதல், உடல் அணு அமைப்பியல் சோதனை

உள்ளிட்ட சிறிய அளவிலான பரிசோதனைகள் செய்வதற்கான அனைத்து உபகரணங்களும் இடம்பெற்றுள்ளன.

24 மணிநேரமும் இயங்கும் வகையில் உள்ள இந்த ஆய்வகத்தில் ஓட்டுநர், பேராசிரியர், ஆய்வக உதவியாளர் என 3 முதல் 4 பேர்வரை பணியில் இருப்பர். தேவைப்படும் நேரத்தில் கல்லூரியில் பல்வேறு துறையைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சென்று கால்நடைகளைப் பரிசோதித்து நோய்த் தடுப்பு முறைகள் குறித்து விளக்கிக் கூறுவர். இவைதவிர, மர்ம நோய் தாக்கி கால்நடைகள் இறப்பது அதிகமிருந்தால் தொடர்புடைய கிராமங்களுக்குச் சென்று இறந்த கால்நடைகளின் மாதிரிகளை எடுத்துவந்து அவற்றைப் பரிசோதிக்க கல்லூரி ஆய்வகத்தில் நவீன வசதி செய்துதரப்பட்டுள்ளது. முன்பு சென்னைக்கு மாதிரிகளை அனுப்பிவந்த நிலை இனி தேவையில்லை. திருநெல்வேலியிலேயே பரிசோதனை செய்து தடுப்பு மருந்து வழங்க முடியும். இதன் ஒருபகுதியாக இந்த சிறப்பு வாகனத்தின் செயல்பாட்டை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. திலகர், புதன்கிழமை கொடியசைத்துத் தொடக்கிவைத்தார். கல்லூரி முதல்வர் சே. பிரதாபன், அனைத்துத் துறைப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

**சோளம் விலையில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது**

தற்போது சோளம் என்ன விலை விற்கிறதோ அந்த விலையில் ஒரு சிறிய மாற்றம் மட்டுமே அறுவடையின்போது இருக்கும் என்று வேளாண் வணிக துணை இயக்குநர் சு.ஞானவேல் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் மானாவரி பயிர்களில் முக்கிய தானியமாக சோளம் பயிரிடப்படுகிறது. இது தீவனப் பயிர் மற்றும் தானியமாக பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் சோளம் ஆடிப்பட்டம் (ஜூலை-செம்படம்பர்) மாதங்களிலும், புரட்டாசி பட்டம் (அக்டோபர் - டிசம்பர்) மற்றும் கோடை

காலங்களிலும் பயிரிடப்படும். விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் புல அலுவலகம் ஆராய்ந்தது.

நல்ல தரமான வெள்ளை சோள ரகத்தின் தற்போதைய விலை ரூ.22 முதல் ரூ.24 வரை திருப்பூர் சந்தையில் விற்கப்படுகிறது. பொருளியியல் அளவை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் ஆடிப்பட்ட பருவ சோளம் அறுவடையின் போது (செப்டம்பர் -அக்டோபர் மாதத்தில்) கிலோவுக்கு ரூ.21-23 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் மேற்கண்ட விலை தகவல் அடிப்படையில் ஆடிப்பட்ட சோளம் விதைப்பது தொடர்பாக முடிவுகளை எடுக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**மாங்கனித் திருவிழா: கடைகள் ஏலத்தின் மூலம் ரூ. 18.5 லட்சம் வருவாய்**

காரைக்கால் மாங்கனித் திருவிழாவில் கடைகள் அமைத்துக் கொள்ள அனுமதிக்கும் பொது ஏலத்தின் மூலம் கோயிலுக்கு ரூ.18.50 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. காரைக்கால் ஸ்ரீ கைலாசநாதர் கோயில் சார்பில் மாங்கனித் திருவிழா இந்த மாதம் நடைபெறவுள்ளது. இதில் ஜூன் 29ஆம் தேதி மாப்பிள்ளை அழைப்பு, 30ஆம் தேதி திருக்கல்யாணம், ஜூலை 1ஆம் தேதி பிச்சாண்டவர் வீதியுலாவில் மாங்கனி வீசும் நிகழ்ச்சி, 2ஆம் தேதி அம்மையாருக்கு இறைவன் காட்சித் தரும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. சுமார் ஒரு மாத காலம் நடைபெறும் இந்த விழாவில் பாரதியார் சாலையில் அம்மையார் கோயிலுக்கு அருகே கடைகள் போடப்படும். இதில் வியாபாரம் செய்பவர் மூலம் கோயிலுக்கு வருவாய் கிடைக்க, கடைகள் பொது ஏலம் விடப்படுவது வழக்கம்.

இந்த பொது ஏலம் அம்மையார் கோயில், நிர்வாக அதிகாரி (கோயில்கள்) எஸ்.கே. பன்னீர்செல்வம், ஸ்ரீ கைலாசநாதர் கோயில் தனி அதிகாரி

கோவி. ஆசைத்தம்பி ஆகியோர் முன்னிலையில் புதன்கிழமை நடைபெற்றது.

ஏலத்தின் மூலம் ரூ. 18.50 லட்சம் கோயிலுக்கு வருவாய் கிடைத்துள்ளதாக தனி அதிகாரி பின்னர் தெரிவித்தார். வழக்கமாக கடைகள் அமைக்கும் இடத்திலேயே நிகழாண்டும் கடைகள் அமைக்கப்படுகிறது. பந்தல் போடும் பணி உடனடியாக தொங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கங்கை கரையில் மூலிகை செடி**

புதுடில்லி:உத்தரகண்டில், கங்கை கரையில் மருத்துவத்துக்கு பயன்படும் மூலிகை செடிகளை பயிரிட, மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. மத்தியில், பா.ஜ., தலைமையிலான தே.ஜ., கூட்டணி அரசு, கங்கை நதியை துாய்மைப் படுத்துவதை, தன் கனவு திட்டமாக கருதி செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில், உத்தரகண்டில், கங்கை நதிக்கரையில், மருத்துவத்துக்கு பயன்படும் மூலிகை செடிகளை பயிரிட திட்டமிட்டு உள்ளது. இதுகுறித்து, மத்திய நீர்வளத் துறை அமைச்சகம், ஆயுஷ் அமைச்சகம், கங்கை சீரமைப்புத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் அதிகாரிகள், நேற்று ஆலோசனை நடத்தினர்.

இதுபற்றி, மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:கங்கையை துாய்மைப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, உத்தரகண்டில், கங்கை நதிக்கரையில், மருத்துவத்துக்கு பயன்படும் மூலிகை செடிகளை பயிரிட முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம், உள்ளூர் மக்களுக்கு

வேலைவாய்ப்புகளும் கிடைக்கும். இந்த திட்டத்தை கண் காணிப்பதற்காக, முன்னாள் ராணுவ வீரர்கள் அடங்கிய பாதுகாப்பு படை ஒன்றும் உருவாக்கப்பட உள்ளது. கங்கையில் குப்பை கொட்டுவதையும், கழிவு கள் கலப்பதையும் தடுக்க, இந்த பாதுகாப்பு படை நடவடிக்கை எடுக்கும்.

**பட்டாணி விதை விலை கடும் உயர்வு:வியாபாரிகள் தயக்கம்; விவசாயிகள் அதிர்ச்சி**

பெங்களூரு:ஒரு குவிண்டால் பட்டாணி விதையின் விலை, 22 ஆயிரம் ரூபாயை எட்டியுள்ளதால், பட்டாணி விளைவிக்கும் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு, பட்டாணி விதையின் விலை, குவிண்டாலுக்கு 5,000 ரூபாய் வரை இருந்தது. நடப்பாண்டு திடீரென, 22 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளதால், விவசாயிகள் அதை வாங்க, தயக்கம் காட்டுகின்றனர்.ஒரு லோடு வரவழைப்புவிவசாயிகள் மட்டுமின்றி, விதை பொருள் வியாபாரிகளும் கூட, பட்டாணி விதையை வாங்க முன்வரவில்லை. தற்போதைய விலையில், வியாபாரிகள் ஒரு லோடு விதை பொருள் வாங்க வேண்டுமானால், 38 - 40 லட்சம் ரூபாய் வரை முன்பணம் தர வேண்டும். இவ்வளவு விலை கொடுத்து, விதையை வாங்கினாலும், விவசாயிகள் வாங்குவர் என்ற நம்பிக்கை வியாபாரிகளிடம் இல்லை. இத்துடன் பட்டாணி விதை தரத்தின் காலகட்டம், ஆறு மாதம் மட்டுமே. இதனால், ஆண்டு தோறும், 15- - 20 லோடு விதை பொருள் வரவழைக்கும் வியாபாரிகள், தற்போது, ஒரு லோடு மட்டுமே வரவழைக்கின்றனர்.உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் மாநிலங்களில் பட்டாணி அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. பெரும்பாலான விதைகள் இவ்விரு மாநிலங்களிலிருந்து சப்ளை செய்யப்படுகிறது. ஆனால், இம்முறை வானிலை மாற்றத்தால் அதிக பனி பொழிந்ததில், இம்மாநிலங்களில் பட்டாணி விளைச்சல் பெருமளவில்

சேதமடைந்துள்ளது. எனவே, பட்டாணி விதைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளது.வெறும் 40 நாட்களில், அறுவடைக்கு தயாராகும் பட்டாணி, வட கர்நாடகாவின் பெலகாவி, தார்வாட் மாவட்டங்களின் சில தாலுகாக்களில் விளைவிக்கப்படுகிறது.

விளைச்சல் குறையும்:மிகவும் நுட்பமான விளைச்சல் பயிரான பட்டாணி, அதிக வெயில், மழையை தாங்காது. விதைப்பின் போது நிலம் ஈரமாக இருந்தால் போதும். அதன்பின், அவ்வப்போது சிறிய அளவில் மழை பெய்தால் நல்ல விளைச்சலை கொடுக்கும். மழை அதிகமானால் அழுகி விடும். தற்போது, மழையின் அளவு குறைந்துள்ளது. பட்டாணி விளைவிக்க விவசாயிகள் ஆர்வம் காட்டினாலும் பட்டாணி விதையின் விலை உயர்ந்திருப்பதால், வாங்க தயக்கம் காட்டுகின்றனர். இதனால், இந்த ஆண்டு பட்டாணி விளைச்சல் கணிசமாக குறை யும் என கூறப்படுகிறது. எனவே, புலாவ், குருமா உணவு தயாரிப்புகளுக்கு, பட்டாணி கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

## மேகியை தொடந்து 500 பொருட்களுக்கு அனுமதி மறுப்பு

டில்லி : மேகி நூடுல்ஸ் சர்ச்சை தொடங்குவதற்கு முன்பாகவே, ஏப்ரல் மாதம் வரை சுமார் 500 உணவுப்பொருட்களுக்கு உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி மறுத்துள்ளது. இந்தப்பட்டியலில் வெங்கிஸ் சிக்கன், கெலாக்ஸ், ரேன்பாக்சியின் ரீவைட்டால், சன் பார்மாவின் அனோபர் போன்றவை இடம் பெற்றுள்ளன, இதில் அதிக சர்க்கரை, கேரமல், உப்பு, உலோகங்கள், காபைன், இரும்புதுகள் அதிகமாக இருப்பதாக கூறி உணவு தரக்கட்டுப்பாடு அனுமதி மறுத்துள்ளது.

**ரசாயனச் சாயம் கலந்த பச்சை பட்டாணி:மக்களே உஷார்**



சிவகங்கை:சிவகங்கை சந்தையில் 'கெமிக்கல்' பவுடர் கலந்த பச்சை பட்டாணி விற்கப்படுவதால் சாப்பிடுவோருக்கு உடல் பாதிப்பு ஏற்படும்.பூரி, சப்பாத்திக்கு மிகச் சிறந்த 'சைடிஸ்' பச்சை பட்டாணி, உருளைக்கிழங்கு குருமா. இதற்காகவே சந்தையில் விற்கப்படும் பச்சை பட்டாணியை பெண்கள் அதிகம் வாங்கிச் செல்வர்.பெரும்பாலான வார, தினசரி சந்தைகளில் சில்லரை விற்பனைக்காக பச்சை பட்டாணி கொண்டு வருபவர்கள் புதிய பட்டாணி போல் காட்டுவதற்காக பச்சை நிற 'கெமிக்கல் பவுடரை' பயன்படுத்துகின்றனர்.

காய்ந்த பட்டாணியை குறைந்த விலைக்கு வாங்கும் இவர்கள் அதை நன்றாக ஊற வைக்கின்றனர். அதில், பச்சை நிறத்திலான 'கெமிக்கல் பவுடரை' கலந்து விடுகின்றனர். சந்தைக்கு வரும்போது, பச்சை பட்டாணி 'பளீச்' என தெரியும். இவற்றை நம்பி பெண்கள் வாங்கி சென்று சமைப்பதால், வயிறு உபாதை ஏற்படுவதாக புகார் எழுந்துள்ளது.

சிவகங்கை உணவு பாதுகாப்பு அலுவலர் ஒருவர் கூறுகையில், "'கெமிக்கல் பவுடர்' கலந்த பச்சை பட்டாணியை வாங்கி

சாப்பிடக்கூடாது. இதனால் வயிறு உபாதை ஏற்படும். குறைந்த விலையில் வாங்கி அதிக லாபம் பார்க்கும் நோக்கில் வியாபாரிகள் 'கெமிக்கல்' கலக்கின்றனர். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

**விளைச்சல் பாதிப்பு: சின்ன வெங்காயம் விலை 'கிடுகிடு'**

சேலம்:சின்ன வெங்காய விளைச்சலில், கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், வெளி மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வரும் வெங்காய வரத்திலும் கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், விலை உச்சத்தை தொட்டுள்ளது.சேலம் மற்றும் கோவை மாவட்டத்தில், அதிகளவில், சின்ன வெங்காயம் விளைவிக்கப்படுகிறது. இந்த பகுதிகளில், நடப்பாண்டு, வெங்காய விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை.

கர்நாடக மாநிலம், மைசூரு, குண்டல்பேட்டை, நகரம், தக்கனப்பள்ளி, ஆந்திரா மாநிலம், ரேனிகுண்டா ஆகிய பகுதிகளில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்த சின்ன வெங்காயத்தின் வரத்தும் சரிந்துள்ளது.மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், குஜராத், பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களில் இருந்து, தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுகளாக கருதப்படும், சென்னை - கோயம்பேடு, சேலம் - லீ பஜார் மற்றும் விருதுநகர், நாகர்கோவில் வடசேரி ஆகிய இடங்களுக்கு, வாரத்துக்கு, 1,500 டன் என்ற அளவுக்கு வந்து கொண்டிருந்த சின்ன வெங்காயம், தற்போது, 25 டன்னாக குறைந்துவிட்டது.

மே முதல் வாரத்தில், உழவர் சந்தைகளில், கிலோ, 35 ரூபாய்க்கு விற்றது, ஒரு மாத இடைவெளியில், நேற்று, கிலோ, 52 ரூபாயாக எகிறிவிட்டது.=இதன் காரணமாக, சமையலுக்கு மிகவும் விரும்பி சேர்க்கப்படும் சின்ன வெங்காயத்தின் விலை, விண்ணை எட்டியுள்ளது.

= வெளி மார்க்கெட்டில், கடந்த மாதம், 75 கிலோ எடை கொண்ட மூட்டை, 2,475 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 3,750 ரூபாய் முதல், 4,750 ரூபாய் வரை, தரத்தை பொறுத்து விற்பனையானது.

சில்லரை விலை, 55 ரூபாய் முதல், 60 ரூபாய் வரை விற்பனையாகிறது.=

= பெரிய வெங்காயத்தின் விலையும், நேற்று கிலோவுக்கு, நான்கு ரூபாய் அதிகரித்தது. உழவர் சந்தைகளில், நேற்று முன்தினம், கிலோ, 28 ரூபாய்க்கு விற்பனையான பெரிய வெங்காயம், நேற்று, 32 ரூபாயாக உயர்ந்தது.

**உரம், விதை நிலவரத்தை பதிவு செய்வது.கட்டாயம், விற்பனையாளர்களுக்கு கிடுக்கிப்பிடி**

வாலாஜாபாத்: 'அக்ரி ஸ்டாக் ஆப்சில்', தினசரி இருப்பு விவரத்தை, உரம் மற்றும் விதை விற்பனையாளர்கள் கட்டாயமாக 'அப்டேட்' செய்ய வேண்டும் என, வேளாண் துறை உத்தரவு பிறப்பித்து உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 148 வேளாண் கூட்டுறவு வங்கிகள் தவிர, 42 மொத்த உர விற்பனையாளர்கள்; 230 சில்லரை உர விற்பனையாளர்கள் உள்ளனர். இது தவிர, 42 அரசு வேளாண் துறை விதை விற்பனை நிலையங்கள்; 22 கூட்டுறவு விதை விற்பனை நிலையங்கள்; 177 தனியார் விதை விற்பனை கடைகள் உள்ளன.

**மானிய விலையில்...**

உர விற்பனை நிலையங்களில், யூரியா; டி.ஏ.பி.,; பொட்டாஷ்; சிங்க் சூப்பர் பாஸ்பேட்; ம்ப்ளக்ஸ் ஆகிய உரங்கள் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், விதை விற்பனை நிலையத்தில், ஏ.டி.டி., 45; பாபட்லா; ஏ.டி.டி., 45 உள்ளிட்ட பல்வேறு ரக விதைகள், மானிய விலையில் விற்பனை

செய்யப்படுகிறது.

**தட்டுப்பாடு**

உரம் மற்றும் விதை விற்பனை நிலையங்களில், மாதந்தோறும் விற்பனை மற்றும் இருப்பு அறிக்கையை, வேளாண் துறை அதிகாரிகளிடம் சமர்ப்பித்து வருகின்றனர். இருப்பினும், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் உரம் தட்டுப்பாடு; வேளாண் விரிவாக்க மையங்களில் விதைகள் தட்டுப்பாடு நிலவி வருவதாக, குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதை தவிர்க்க வேண்டும் என்பதற்காக, வேளாண் துறை நிர்வாகம், வேளாண் இணையதளத்தில், 'அக்ரி ஸ்டாக்' என்னும் 'ஆப்ஸ்' துவக்கி உள்ளது. இதன் மூலம், உரம் மற்றும் விதை

விற்பனை நிலையங்களில், தினந்தோறும் இருப்பு மற்றும் விற்பனை விவரங்களை, கட்டாயமாக கையடக்க அலைபேசியில் (ஹேண்ட் டிரைவ்) தெரிவிக்க வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

***சிறப்பு பயிற்சி***

இதுகுறித்து, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: உரம் மற்றும் விதை விற்பனை நிலையங்களில், இருப்பு விவரத்தை, தினசரி வேளாண் துறை நிர்வாகத்திற்கு 'அக்ரி ஸ்டாக் ஆப்சில்' தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதற்காக வேளாண் துறை நிர்வாகம், விற்பனை முகவர்களை அழைத்து, இணையதளத்தில் இருந்து 'அக்ரி ஸ்டாக் ஆப்ஸ் டவுன் லோடு' செய்யப்பட உள்ளது.

இந்த 'ஆப்சி'ல் விற்பனை முகவர்களின் பதிவு எண் மூலம், தகவல் பரிமாற்றம் செய்வதற்கு, சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. இப்பணிகளை ஒரு வாரத்திற்குள் முடிக்கவும்,

திட்டமிடப்பட்டு உள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

விற்பனை முகவர்களின் பதிவு எண் மூலம், தகவல் பரிமாற்றம் செய்வதற்கு, சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. இப்பணிகளை ஒரு வாரத்திற்குள் முடிக்கவும், திட்டமிடப்பட்டு உள்ளது

**நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி**

காஞ்சிபுரம்: உழவர் பயிற்சி மைய தலைவர் வீரமணி வெளியிட்ட செய்திகுறிப்பு:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்துாரில், உழவர் பயிற்சி மையம் இயங்கி வருகிறது.

இங்கு, கால்நடை வளர்ப்பில், புதிய தொழில்நுட்பங்களையும், கோழி வளர்ப்பு சம்பந்தப்பட்ட நுட்பங்களையும் பண்ணையாளர்கள், சிறு தொழில் புரிவோர், வேலையில்லா இளைஞர்கள், சுய உதவி குழுக்கள் மற்றும் மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த மையத்தில், நாட்டுக்கோழி வளர்ப்பது குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி, நாளை அளிக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள், நேரடியாகவோ, அல்லது 044-27264019 தொலைபேசி எண் மூலம், தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செக்கானூர் கதவணை பராமரிப்பு தீவிரம் ஓரிரு நாளில் காவிரியில் நீர்தேக்க வாய்ப்பு**

மேட்டூர்:செக்கானூர் கதவணை பராமரிப்பு பணி முடிவடையும் தருவாயில் உள்ளதால், ஓரிரு நாளில், மேட்டூர் காவிரியாற்றில்

நீர்தேக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அடுத்த செக்கானூரில், காவிரியின் குறுக்கே, 30 மெகாவாட் திறன் கொண்ட கதவணை மின் உற்பத்தி நிலையம் உள்ளது. மின் உற்பத்தி செய்வதற்காக, மேட்டூர் அணை அடிவாரம் முதல், செக்கானூர் வரை, காவிரியாற்றில், 0.5 டி.எம்.சி., நீர் தேக்கப்படும்.மேட்டூர் அணை நீர்மட்டம் குறைவாக இருந்ததாலும், காவிரியில் தேக்கிய தண்ணீரை கீழ்பகுதிக்கு திறந்தால் குடிநீர் வினியோகம் பாதிக்கும் என்பதாலும், கடந்த, 2013, 2014 ஆகிய இரு ஆண்டுகளும், செக்கானூர் கதவணை பராமரிப்பு நடக்கவில்லை. நடப்பாண்டு மேட்டூர் அணையில், 36 டி.எம்.சி., நீர் இருந்ததால், இரு ஆண்டுக்கு பின், கடந்த மாதம் இறுதியில் செக்கானூர் கதவணை பராமரிப்பு துவங்கியது. இதற்காக காவிரியில் தேக்கிய, 0.5 டி.எம்.சி., நீர் கீழ்பகுதிக்கு திறக்கப்பட்டது. செக்கானூர் கதவணை மின்நிலையத்தில், காவிரி குறுக்கே, 18 ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு பணிக்காக, ஷட்டர் அனைத்தும் இரு ஆண்டுக்கு பின், மேலே உயர்த்தப்பட்டு, பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பராமரிப்பு பணி நிறைவடைந்ததால், ஷட்டர்கள் கீழே இறக்கப்பட்டு, ஓரிரு நாளில் காவிரியில் மீண்டும், 0.5 டி.எம்.சி., நீர் தேக்கப்படும்.இந்நிலையில், வினாடிக்கு, 2,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை குடிநீர் திறப்பு, நேற்று காலை வினாடிக்கு, 1,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 74.130 அடியாகவும், நீர் இருப்பு, 36.354 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. நேற்று முன்தினம் வினாடிக்கு, 3,652 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 2,739 கனஅடியாக சரிந்தது.

## சணல், தேங்காய் நார் மூலம் சாலை மாநில அரசுக்கு வாரியம் பரிந்துரை

ஊட்டி:'மலைப்பகுதிகளில், சணல் மற்றும் தேங்காய் நார்களை கொண்டு சாலை அமைக்கும் திட்டம் செயல்படுத்தலாம்' என்று, தேசிய சணல் வாரியம், மாநிலஅரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.தேசிய சணல் வாரியம் மற்றும் சிறு தொழில் மேம்பாட்டு கழகம் (சிட்கோ) சார்பில், சணல் பொருள் கண்காட்சி, ஊட்டியில் நடந்தது. சணலை முக்கிய மூலப்பொருளாக கொண்டு, பருத்தி, மூங்கில் உதவியுடன் தயாரிக்கப்பட்ட கைப்பை, லேப்-டாப் பை, காய்கறி வாங்கும் பை, பேன்சி பொருட்கள், தரை விரிப்புகள் என, பலவகை பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.தேசிய சணல் வாரிய சந்தைப்படுத்தும் பிரிவு அதிகாரி ஐயப்பன் கூறுகையில், "நாட்டில், சணல் பொருள் உற்பத்தியாளர்கள் அதிகளவில் உள்ளனர்; பலர் குடிசை தொழிலாக செய்து வருகின்றனர். ஆண்டுக்கு, பல கோடி ரூபாய் மதிப்பிலான சணல் பொருட்கள், ஏற்றுமதி செய்யப்படுகின்றன."மலை பிரதேசங்களில், சணல், தேங்காய் நார்களை கொண்டு அமைக்கப்படும் சாலைகள், பேரிடரின் போது பாதிக்கப்படுவதில்லை. விவசாய நிலங்களில் சணல் வலை, தேங்காய் நார் மூலம் தடுப்பு அமைப்பதன் மூலம் மண் அரிப்பு குறைகிறது. நீலகிரி, கொடைக்கானல், வால்பாறை உள்ளிட்டமலைப் பிரதேசங்களில் சணல், தேங்காய் நார் பயன்படுத்தி சாலை அமைக்க வேண்டும் என, மாநில அரசுக்கு பரிந்துரை செய்துள்ளோம்," என்றார்.

## நீலகிரி வனப்பகுதியில் ஜப்பான் குழுவினர் ஆய்வு

ஊட்டி:நீலகிரி வனப்பகுதிகளில், ஜப்பான் ஒருங்கிணைந்த முகமை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.ஜப்பான் பன்னாட்டு ஒருங்கிணைந்த முகமை நிதியுதவியுடன், தமிழ்நாடு உயிர் பன்மை

மற்றும் பசுமையாக்கல் திட்டம், 2011ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும், 2019ம் ஆண்டு வரையிலான இத்திட்டத்திற்கு, 686.28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஜப்பான் மட்டும், 400 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ழங்கியுள்ளது.

இத்திட்டப்படி, காடுகளின் பரப்பை அதிகப்படுத்தி, பசுமையான சூழலை உருவாக்கி, பருவ மழை, தவறாமல் பெய்வதற்குரிய முயற்சியை மேற்கொள்ளவும், வன விலங்குகளுக்கான தண்ணீர், உணவு, அவை வசிக்கும் இடங்களிலேயே கிடைக்க செய்யவும், பணிகள் நடந்து வருகின்றன.

இத்திட்டப்படி நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை, ஜப்பான் பன்னாட்டு ஒருங்கிணைந்த முகமை அதிகாரிகள் குழுவினர், அதன் திட்ட நிபுணர் சிவ்யோ யூகோ தலைமையில் நேற்று ஆய்வு செய்தனர். ஊட்டி தொட்டபெட்டா, அவலாஞ்சி, அப்பர் பவானியில் பணிகளை பார்வையிட்டனர்.

**காய்கறி விற்பனையில் பாதிப்பில்லை கம்பம் சந்தையில் கேரள வியாபாரிகள்**

கம்பம்:காய்கறிகளில் அதிகமாக பூச்சிகொல்லி மருந்துகள் பயன்படுத்துவதாக கூறி கேரள அதிகாரிகள் பிரச்னை செய்துவரும் நிலையில், கம்பம் வாரச்சந்தையில் கேரள மாநில வியாபாரிகள் வழக்கம்போல் காய்கறிகளை கொள்முதல் செய்தனர். கேரள உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் வேளாண் துறையினர் தமிழக அரசிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இங்கு சாகுபடி செய்யப்படும் காய்கறிகளில் அதிக வீரியம் கொண்ட பூச்சி கொல்லி மருந்துகள் பயன்படுத்துவதாக கூறியுள்ளனர். கேரளாவில் தமிழக காய்கறிகளை வாங்க தயக்கம் காட்டுவதாக தகவல் பரப்பப்பட்டது. இதையடுத்து தமிழக தோட்டக்கலைத்துறையினரும், பூச்சிகொல்லி மருந்துகளை குறைவாக பயன்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் கம்பம்

வாரச்சந்தையில் கேரளாவை சேர்ந்தவர்கள் காய்கறி வாங்குவதற்கு வழக்கம் போல் அதிகளவில் வந்தனர்.

வியாபாரிகள் கூறியதாவது :பூச்சிகொல்லி மருந்து தெளிப்பது குறைக்கப்பட வேண்டும் என்பது நல்லது தான். ஆனால் கேரளாவில் இந்த பிரச்னை கிளம்பிய பின், கம்பம் வாரச்சந்தை மற்றும் உழவர் சந்தையில் கேரளாவைச் சேர்ந்தவர்களின் கொள்முதலில் எந்த மாற்றமும் இல்லை. இடுக்கி மாவட்டத்தில் வசிப்பவர்கள் அதிக எண்ணிக்கையில் காய்கறி கொள்முதல் செய்ய வந்தனர், என்றனர்.

**திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அங்கீகாரம்**

கம்பம்:ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு தேசிய வேளாண் ஆராய்ச்சி மையம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் கீழ் செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது.கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடியை ஊக்குவிக்க ஆனைமலையன்பட்டியில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.

நோய் தாக்குதல், விலை கிடைக்காதது போன்றவற்றால் திராட்சை விவசாயிகள் வாழைக்கு மாறுவதை தடுக்கும் முயற்சியில் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். தற்போது தேசிய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஒருங்கிணைப்பு மையத்தை பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் அமைத்துள்ளது. ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்தை அதனுடன் இணைந்து செயல்பட அறிவுறுத்தியுள்ளது. இது இந்த மையத்திற்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும். தேசிய வேளாண் ஆராய்ச்சி மையத்தால் பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில், கணிசமான நிதி ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப்படும்.

திராட்சை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பார்த்திபன் கூறுகையில், ""ஒருங்கிணைப்பு மையமாக பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் செயல்படுகிறது. தேசிய வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்தை அங்கீகாரம் செய்துள்ளது. மேலும் பல விஷயங்களுக்கு தேசிய வேளாண் ஆராய்ச்சி மையத்தை அணுக திட்டமிட்டுள்ளோம்," என்றார்.

**மானிய விலையில் விதை நெல்: விவசாய அதிகாரி தகவல்**

கூடலூர்:மானிய விலையில் விதை நெல் இருப்பில் உள்ளதாக, கம்பம் விவசாய உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.விவசாய உதவி இயக்குனர் அசோகன் கூறியதாவது: கம்பம் வட்டார விவசாயிகளுக்கு ஏ.டி.டி-45, ஏ.டி.டி.-36, ஆகிய விதை நெல், கம்பம் விவசாய விரிவாக்க மையத்தில் இருப்பில் உள்ளது. இது 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. குறுவைப் பருவத்தில் பயிரிடுவதற்கு ஏற்ப இந்த விதை நெல் அமைந்துள்ளது.
வீரிய ஒட்டுரக விதைகளை வாங்கும் போது, விதைக்கான உரிமம் மற்றும் அங்கீகாரம் பெற்ற கடைகளில் மட்டும் வாங்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறையில், ஹெக்டேருக்கு 5 கிலோ விதையளவில் 22.5 செ.மீ., பயிர் இடைவெளியில் தண்ணீர் மட்டம் 2.5 செ.மீ., அளவிலும் பின்பற்றுவதால், விதையளவு குறைவதோடு, தண்ணீர் தேவையும் குறைகிறது. திருந்திய நெல் சாகுபடியில், இளவயது நாற்று, ஒற்றை நாற்று நடவு முறை, சதுர நடவு, கோனோ களைக்கருவி மூலம் களையெடுத்தல், நீர் மறைய நீர்க்கட்டுதல், இலைவண்ண அட்டை கொண்டு தழைச்சத்து மேலாண்மை ஆகிய தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதால் தூர்கள் எண்ணிக்கை அதிகரித்து மகசூல் கூடுதலாக

கிடைக்கும். இயந்திர நடவு முறை மற்றும் மானிய விபரங்களை அந்தத்தப் பகுதி விவசாய உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**நாப்தாவை பயன்படுத்தி தமிழ்நாட்டில் யூரியா உர உற்பத்திக்கு ஒப்புதல் மத்திய மந்திரிசபை வழங்கியது**



புதுடெல்லி

தமிழ்நாட்டில் சென்னை மணலியில் உள்ள 'எம்.எப்.எல்.' என்றழைக்கப்படுகிற சென்னை உர நிறுவனம், தூத்துக்குடியில் உள்ள ஸ்பிக் நிறுவனம், நாப்தா இருப்பு இருக்கும் வரையில், அதை மூலப்பொருளாக கொண்டு யூரியா உரம் தயாரிப்பதற்கு மத்திய மந்திரிசபை நேற்று ஒப்புதல் வழங்கியது. இதே போன்று கர்நாடக மாநிலம், மங்களூரில் உள்ள மங்களூர் ரசாயனம் மற்றும் உர

நிறுவனத்துக்கும் நாப்தாவை பயன்படுத்தி யூரியா உரம் தயாரிக்க மத்திய மந்திரிசபை அனுமதி அளித்தது.

ஆனால், 2014–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் மத்திய மந்திரிசபை கூட்டத்தில் முடிவு செய்தபடி நாப்தாவுக்கு தமிழ்நாடு மற்றும் கர்நாடக அரசுகள் ‘வாட்’ வரியோ அல்லது நுழைவு வரியோ வசூலிக்க கூடாது.

இந்த தகவல்களை மத்திய ரசாயனங்கள், உரத்துறை மந்திரி அனந்த் குமார் தெரிவித்தார்.

**சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.6 ஆயிரம் கோடி வட்டியில்லா கடன் மோடி அரசு வழங்குகிறது**



புதுடெல்லி

கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் தர வேண்டிய பாக்கி தொகை ரூ.21 ஆயிரம் கோடியை எட்டி உள்ளது.

இந்த நிலையில், விவசாயிகளுக்கு தர வேண்டிய தொகையில் ஒரு பகுதியை வழங்கத்தக்க விதத்தில், சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.6 ஆயிரம் கோடி வட்டியில்லா கடன் வழங்க பிரதமர் மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான ஒப்புதலை மத்திய மந்திரிசபை நேற்று வழங்கியது.

விவசாயிகளின் பட்டியலை தயார் செய்து, மத்திய அரசிடம் சர்க்கரை ஆலைகள் அளிக்கிறபோது, அவர்களின் வங்கிக்கணக்குகளில் தொகை நேரடியாக செலுத்தப்படும் என மத்திய மந்திரி நிதின் கட்காரி கூறினார்.

நாட்டில் உத்தரபிரதேசம், மராட்டியம், கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, பீகார், குஜராத், அரியானா, உத்தரகாண்ட், பஞ்சாப் மாநிலங்கள் சர்க்கரை உற்பத்தியில் முன்னணி வகிப்பவை என்பது குறிப்பிடத்தக்கது.

**உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கெல்லாக்ஸ் உள்பட 500 பொருட்கள் கருப்பு பட்டியலில் சேர்ப்பு உணவு பாதுகாப்பு ஆணையம் நடவடிக்கை**



புதுடெல்லி

மேகி நூடுல்ஸ் மீதான நடவடிக்கையைத் தொடர்ந்து, உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மேலும் 500 உற்பத்தி பொருட்களை இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் கருப்பு பட்டியலில் சேர்த்துள்ளது. இவை டாடா ஸ்டார்பக்ஸ், கெல்லாக்ஸ், வெங்கிஸ், ரான்பாக்ஸி

உள்ளிட்ட நிறுவனங்களின் தயாரிப்புகள் ஆகும். இவற்றில், டாடா ஸ்டார்பக்ஸ் நிறுவன பொருட்கள் மட்டும் 32 ஆகும். இவை பெரும்பாலும் சாஸ் மற்றும் சிரப்கள் ஆகும்.

இந்த 500 பொருட்களில், சர்க்கரை, காரமல், உப்பு, கன உலோகங்கள், காபின், இரும்பு கலவை ஆகியவை அதிக அளவு கலக்கப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கோவையில் மீன் விலை கடும் உயர்வு வஞ்சிரம் கிலோ ரூ.900; வாவல் கிலோ ரூ.650**




கோவையில் மீன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக வஞ்சிரம் மீன் கிலோ ரூ.900-க்கும், வாவல் மீன் கிலோ ரூ.650-க்கும் விற்பனையாகிறது. மீன் வகைகள்

தமிழகத்தில் தூத்துக்குடி, கன்னியாகுமரி, ராமேஸ்வரம் கடல் பகுதிகளில் இருந்தும், அண்டை மாநிலமான கேரளா கடல் பகுதியில் இருந்தும் மீன்

பிடிக்கப்பட்டு, கோவைக்கு லாரிகள் மூலமாக கொண்டு வந்து, மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேபோல் கோவையில் உள்ள குளங்கள் மற்றும் அணைகளில் மீன் பிடிக்கப்பட்டு சந்தைக்கு கொண்டுவரப்பட்டு விற்கப்படுகிறது. மீன் இனப்பெருக்க காலம் என்பதால், தமிழகத்தில் கடந்த மாதம் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டது. இதனால் மீன் வரத்து குறைந்து காணப்பட்டதால், விலை அதிகரித்து காணப்பட்டது.

கிடுகிடு விலை உயர்வு

மீன்பிடி தடைக்காலம் முடிந்தும் விலை குறையவில்லை. இந்தநிலையில் அண்டை மாநிலமான கேரளாவில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளதால், கோவைக்கு மீன் வரத்து குறைந்துள்ளது. இதனால் மீன் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இந்தநிலையில் கோவையில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை விவரம் வருமாறு:- வஞ்சிரம் மீன் பெரியது கிலோ ரூ.900-க்கும், சிறியது ரூ.700-க்கும் விற்பனையானது. வெள்ளை வாவல் கிலோ ரூ.650-க்கும், கருப்பு வாவல் கிலோ ரூ.500-க்கும் விற்கப்பட்டது. இறால் முதல் ரகம் ரூ.600-க்கும், 2-வது ரகம் ரூ.500-க்கும், விளைமீன் கிலோ ரூ.400-க்கும், பாறை மீன் கிலோ ரூ.400-க்கும், ஊழி மீன் கிலோ ரூ.380-க்கும், நெத்திலி மீன் கிலோ ரூ.250-க்கும், நண்டு கிலோ ரூ.250-க்கும், அயிலை மீன் கிலோ ரூ.240-க்கும், மத்தி மீன் கிலோ ரூ.80-க்கும் விற்பனையானது.

அணை மீன் ரகங்கள்

இந்தநிலையில் அணை மீன் ரகங்களான நெய் மீன் கிலோ ரூ.120-க்கும், கட்லா மீன் கிலோ ரூ.160-க்கும், ஆவோலி மீன் கிலோ ரூ.160-க்கும், ரோகு கிலோ ரூ.140-க்கும் விற்பனையாகிறது. இதேபோல் ஆட்டு இறைச்சி கிலோ ரூ.460 முதல் ரூ.500 வரையிலும், கறிக்கோழி இறைச்சி கிலோ ரூ.180 முதல் ரூ.200 வரையிலும், நாட்டுக்கோழி இறைச்சி கிலோ ரூ.350-க்கும் விற்பனையாகிறது. கேரளாவில் மீன்பிடி தடைக்காலம்

முடிந்து, வரத்து அதிகரித்தால் மட்டுமே கடல் மீன்கள் விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யக்கோரி ராகுல்காந்தியை சந்திக்க விவசாயிகள் முடிவு**



பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யக்கோரி அகில இந்திய காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் ராகுல்காந்தியை சந்திக்க விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

கடும் அதிருப்தி

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள் அதிகளவு தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தின் பொருளாதாரம் தேயிலை தொழிலை நம்பியே உள்ளது. சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் அறுவடை செய்யும் பச்சை தேயிலைக்கு தகுந்த விலை கிடைக்காமல் தற்போது தவித்து வருகின்றனர். கடந்த ஒரு மாத காலமாக தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் விலை குறைவு காரணமாக பச்சை தேயிலையும் கடுமையான விலைச்சரிவை சந்தித்து வருகிறது. தேயிலை மகசூல் அதிகரிப்பு

காரணமாக, தேயிலை தூள் உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தை கூறினாலும், தற்போது உள்ள சூழ்நிலையில் பச்சை தேயிலையின் விலைகுறைவு என்பது விவசாயிகளின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. தற்போது பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ.7 முதல் ரூ.13 வரை விலை வழங்கப்பட்டு வருகிறது.

ராகுல்காந்தியை சந்திக்க முடிவு

விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் தோட்டத்தை பராமரிக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். சிறு தேயிலை விவசாயிகளின் நிலையை பாராளுமன்றத்தில் எதிரொலிக்க நீலகிரி மாவட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் சங்கம் திட்டமிட்டு உள்ளது. இதன்படி அகில இந்திய காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் ராகுல்காந்தி தமிழகம் வரும் போது அவரை சந்தித்து, பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்க முடிவு செய்து உள்ளனர்.

இது குறித்து நீலகிரி மாவட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் சங்க தலைவர் ஜே.பி.சுப்பிர மணியம் கூறியதாவது:-

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுமார் 65 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் விலை வீழ்ச்சியின் காரணமாக கடும் சிரமம் அடைந்து வருகிறோம். சென்னை ஐகோர்ட்டு சிறு விவசாயிகள் சாகுபடி செய்யும் பச்சை தேயிலைக்கு குறைந்தபட்ச நியாய விலை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளது. ஆனால் இது வரை இந்த தீர்ப்பு அமல்படுத்தப்பட வில்லை.

ரூ.25 நிர்ணயம் செய்ய வேண்டும்

மத்திய வர்த்தகத்துறை மந்திரியை சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த நேரம் ஒதுக்க கேட்டும் இதுநாள் வரை நேரம் ஒதுக்கப்படவில்லை. இந்த மாத இறுதியில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் ராகுல்காந்தி திருச்சிக்கு வருகிறார். அப்போது அவர் தமிழக விவசாயிகளை சந்தித்து உரையாடுகிறார். இந்த சமயத்தில் நீலகிரி மாவட்டத்தில் இருந்து சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள்

முன்னாள் மத்திய மந்திரி பிரபு தலைமையில் 50 பேர் கொண்ட குழுவாக சென்று, தேயிலை விவசாயிகளின் குறைகளை எடுத்துரைக்க உள்ளோம்.

தேயிலை பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று கோரிக்கையை முன்வைக்க உள்ளோம். சமீபத்தில் தமிழகத்திற்கு வந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சி பொது செயலாளர் முகுல் வாசினிக்கிடம் மனு அளிக்கப்பட்டு உள்ளது. பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ.25 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இதில் தாமதம் ஏற்பட்டால் பெரிய அளவில் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தின் மூலம் 551 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன**




பெரம்பலூரில் நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தின் மூலம் 551 விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக வேளாண்

அதிகாரி கூறினார். மண்வள அட்டை

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) அய்யாசாமி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:- பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் நடமாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் கடந்த மாதம் 21-ந் தேதி முதல் 18 கிராமங்களுக்கு சென்று மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் ஆய்வு செய்து விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1,022 மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 551 விவசாயிகளின் நிலங்களில் மண் ஆய்வு செய்து அவர்களுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிர் சாகுடி மேற்கொள்வதற்கு முன் மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிருக்கு தேவையான அளவு உரத்தை மட்டும் இட்டு சாகுபடி செலவை குறைக்க வாய்ப்பு உள்ளது.

பெருமத்தூர் பகுதிகளில்...

வேப்பூர் வட்டாரத்திற்கு நடமாடும் மண் ஆய்வு நிலைய வாகனம் மண்மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு வருகை தர உள்ளது. இன்று (வியாழக்கிழமை) பெருமத்தூர் பகுதியிலும், நாளை (வெள்ளிக்கிழமை) அன்று கீழப்புலியூர் பகுதியிலும், 13-ந் தேதி (சனிக்கிழமை) அத்தியூர் மற்றும் அத்தியூர் குடிகாடு ஆகிய பகுதிகளுக்கு வருகை தந்து மண் மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. அதே சமயம் அனைத்து விவசாயிகளும் தங்களது வயலில் மண் மாதிரிகள் சேகரித்து கட்டணமாக ரூ.20-ஐ செலுத்தி மண் ஆய்வு செய்து, அதன்படி உரங்கள் அளவோடு இட்டு சாகுபடி மேற்கொண்டு விவசாயிகள் அதிக லாபம் பெற்று பயனடையலாம்.

இவ்வாறு அதில் அவர் கூறி உள்ளார்.

**விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்**

**பா.ம.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் பேட்டி**




மேட்டூர் அணை நாளை திறப்பு இல்லை என்பதால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று பா.ம.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் கோ.ஆலயமணி கூறினார்.

பேட்டி

பா.ம.க. மாநில துணை பொதுச் செயலாளர் கோ.ஆலயமணி தஞ்சையில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

காவிரிடெல்டா பாசனத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12-ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக ஜூன் 12-ந்தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டும் தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லை என்று தமிழகஅரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே முப்போக சாகுபடி நடைபெற்ற காவிரிடெல்டா பகுதியில் இப்போது ஒரு சாகுபடி நடைபெறுவதை கேள்விக்குறியாக உள்ளது. பருவமழை

பொய்த்துவிட்டது. மேட்டூர் அணையும் திறக்கப்படவில்லை. இதன் காரணமாக விவசாயிகள் நலிவடைந்துள்ளனர். விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். காவிரி பிரச்சினை தமிழகத்தின் பொது பிரச்சினை. இந்த பிரச்சினையில் சாதி, மத வேறுபாடு இன்றி, அரசியல் சார்பு இன்றி தமிழகத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுப்பது இல்லை. அப்படி ஒன்று சேருவதற்கு திராவிட கட்சிகள் அனுமதிப்பதும் இல்லை. ஆனால் கர்நாடகத்தில் சாதி, மத, கட்சி வேறுபாடு இன்றி அனைவரும் காவிரி பிரச்சினையில் ஒன்று சேர்ந்து போராடுகின்றனர். கர்நாடகத்தில் விவசாயிகள் போராட்டத்தை அரசே முன்னின்று நடத்துகிறது. ஆனால் தமிழகத்தில் விவசாயிகள் போராட்டம் நடத்தினாலும் அரசு அந்த போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பது இல்லை. காவிரி பிரச்சினையை ஜீவாதார பிரச்சினை என்று யாரும் நினைப்பது இல்லை. கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்குரிய தண்ணீரை பெற்று மேட்டூர் அணையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது மாநில துணை பொதுச் செயலாளர் எஸ்.எம்.மூர்த்தி, உழவர் பேரியக்க மாநில துணைச் செயலாளர் ஜோதிராஜ், வடக்கு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட பொருளாளர் மல்லிகாபேகம் ஆகியோர் உடன் இருந்தனர்.

தினகரன்

# ஜனாதிபதியை சந்தித்த விவசாயிகள் நம்பிக்கை: காவிரி விவகாரத்தில் விரைவில் தீர்வு கிடைக்கும்




திருவாரூர்: காவிரி பிரச்னை தொடர்பாக ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்திகரமாக இருந்ததாக டெல்லியிலிருந்து திரும்பிய விவசாயிகள் தெரிவித்தனர். காவிரியில் கர்நாடக அரசு புதிய அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும். அணை கட்டும் பிரச்னையில் கர்நாடகாவை சேர்ந்த மத்திய அமைச்சர்களின் பேச்சு அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்பதை விளக்கி கூறவும், காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் படி மேலாண்மை ஒழுங்கு முறை வாரியம் மற்றும் ஒழுங்காற்று குழுவை உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

காவிரியில் கர்நாடக அரசு கழிவுநீர் திறந்து விடுவதை தடுக்க வேண்டும். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி மாதந்தோறும் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை பெற்று தர வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் மனு அளிக்க டெல்டா விவசாயிகள் டெல்லி சென்றனர். அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர்.பாண்டியன்

தலைமையில் 18 விவசாய சங்கங்களை சேர்ந்த பொறுப்பாளர்கள் 21 பேர் கடந்த 6ம் தேதி டெல்லியில் குடியரசு தலைவர் பிரணாப்முகர்ஜியை சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர். பின்னர் இவர்கள் அனைவரும் ரயில் மூலம் நேற்றுமுன்தினம் மாலை திருவாரூர் வந்தனர். திருவாரூர் ரயில் நிலையத்தில் விவசாயிகளுக்கு, பல்வேறு விவசாய சங்கத்தினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக பேருந்து நிலையம் வந்தனர். அங்கு நடந்த நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாண்டியன் மற்றும் விவசாயிகள் பேசுகையில், காவிரி விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்திகரமாக இருந்தது. இவ்விஷயத்தில் நல்ல தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம் என்றனர்.

**1790 வாழைத் தார் ரூ.1.66 லட்சத்துக்கு ஏலம்**

தொட்டியம், : தொட்டியம் வட்டாரத்தில் உள்ள மணமேடு சீனிவாநல்லூர், மகேந்திரமங்கலம், வரதராஜபுரம், திருநாராயணபுரம், காரைக்காடு, எம்.புத்தூர், நத்தம், காடுவெட்டி, காட்டுப்புத்தூர், சீலைப்பிள்ளையார் புத்தூர், ஸ்ரீராமசமுத்திரம், சின்னப்பள்ளி பாளையம், பெரியபள்ளி பாளையம், உன்னியூர் உள்ளிட்ட கிராமங்களில் வாழை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு காட்டுப்புத்தூர் சீலைப்பிள்ளையார்புத்தூர் சாலையில் உள்ள அரசு வாழைத்தார் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கட்கிழமை ஏலம் விடப்படுவது வழக்கம். இதன் படி, நேற்று முன்தினம் ஏலம் நடைபெற்றது. இதில் 1790 வாழைத்தார்கள் ரூ.1.66 லட்சத்துக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டன. இதில் ரஸ்தாளி தார் ரூ.285க்கும், கற்பூரவள்ளி தார் ரூ.250க்கும், மொந்தன் தார் ரூ.125க்கும், பூவன் தார் ரூ.350க்கும் ஏலத்தில் எடுக்கப்பட்டன.

**வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**

தா.பேட்டை, : வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று முசிறியில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. முசிறி ஆர்டிஓ அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம் ஆர்டிஓ ஜெய்னுலாப்தீன் தலைமையில் நடைபெற்றது. தாசில்தார் மலர்க்கொடி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், தமிழகத்துக்கு கர்நாடகா திறந்துவிட வேண்டிய தண்ணீரை பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். முசிறி கைகாட்டியில் அண்ணா சிலையை மையமாக வைத்து அதைச் சுற்றி ரவுன்டானா அமைத்து போக்குவரத்தை சீர்படுத்த வேண்டும். மேட்டு வாய்க்காலில் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும். வேளாண் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்வதோடு, விவசாய விளைப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முசிறி தீயணைப்பு நிலையம் அருகே அமைந்துள்ள குட்டையை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். குறிப்பாக குட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் பட்டா வழங்க கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

**தென்னையை தாக்கும் தஞ்சை வாடல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை விவசாயிகளுக்கு வழிகாட்டல்**

சேதுபாவாசத்திம், : தென்னையை தாக்கும் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னையை தாக்கும் நோய்களில் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகல் நோய் மிக முக்கியமானதாகும். தஞ்சை வாடல்நோயானது தென்னையின் தண்டுப்பகுதியின் அடிப்பாகத்தில் பழுப்பும், சிவப்பும் கலந்த சாறு வடியும். வாடல்நோய் தாக்கப்பட்ட மரத்தின் அடிமட்டைகள்

பழுப்பு நிறமடைந்து காய்ந்து தொங்கும். பிறகு நாளடைவில் மரத்தின் மட்டைகள் கீழே விழுந்து மரம் மொட்டையாக மாறும். இதை கட்டுப்படுத்த வறட்சி காலத்தில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நோய் தாக்கிய மரம் ஒன்றுக்கு பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களுடன் 50 கிலோ தொழு உரம் மற்றும் 5 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்து இட வேண்டும். வாழையை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலம் இந்நோயின் தாக்குதலை குறைக்க முடியும். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் என்ற உயிர் பூசானத்தை 50 கிலோ மக்கிய தொழு எருவுடன் கலந்து மரத்தை சுற்றி 3 அடி தூரத்தில் வைத்து இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

பாஸ்போ பாக்டீரியா என்ற நுண்ணுயிர் 200 கிராமுடன் (1 பாக்கெட்) 10 கிலோ தொழு உரம் கலந்து இடுவதன் மூலம் இந்நோயின் பாதிப்பை குறைக்கலாம். நோய் தாக்கிய ஒவ்வொரு மரத்துக்கும் 40 லிட்டர் வீதம் 1 சத போர்டோ கலவையை (400 கிராம் மயில்துத்தத்தை 20 லிட்டர் நீரிலும், 400 கிராம் நீர்த்த சுண்ணாம்பை 20 லிட்டர் நீரிலும் கரைத்த கலவை) மரத்தை சுற்றி 1.8 மீட்டர் வட்ட பாத்தியில் மண் நன்றாக நனையுமாறு ஊற்றினால் நோய் பூஞ்சானத்தை அழிக்கலாம். இந்நோயை கட்டுப்படுத்த ஆரியோபஞ்சின்சால் 2 கிராம், தாமிர சல்பேட் ஒரு கிராம் ஆகியவற்றை 100 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்த வேண்டும். வேரூட்டம் செய்ய பென்சில் அளவு தடிமன் உள்ள புதிய இளஞ்சிவப்பு வேரை கூரிய கத்தியால் சாய்வாக வெட்டி மேற்படி கரைசலில் உள்ள பாலித்தீன் பையில் நுழைத்து கட்டி வைக்க வேண்டும்.

குருத்தழுகல் நோயை பொறுத்தவரை தென்னங்கன்றுகளிலும் இளம்மரங்களில் மட்டுமே காணப்படும். குருத்தின் பச்சைநிறம் மாறி மஞ்சளாகி பின்னர் அழுகி வாடிவிடும். இதை கட்டுப்படுத்த ஒரு கிலோ மயில்துத்தம் மற்றும் ஒரு கிலோ சுண்ணாம்பு தூளை தனித்தனியே 5 லிட்டர் நீரில் கரைத்து போர்டோ பசையை தயாரிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட குருத்து பகுதியில் இந்த பசையை தடவி மழைநீர் படாதவாறு பார்த்து கொண்டால் இந்நோய் எளிதில் கட்டுப்படும்.

**ஆமணக்கை அழிக்க துடிக்கும் பூச்சிகள் வேளாண்துறை எச்சரிக்கை**

பழநி, : ஆமணக்கை அழிப்பதற்காக துடித்துக்கொண்டிருக்கும் பூச்சிகளை இனம்கண்டு அவற்றை முழுமையாக ஒழித்தால்தான் எதிர்பார்க்கும் மகசூலை பெறமுடியும் என விவசாயிகளுக்கு வேளாண்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய்வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி முக்கியமானதாக கருதப்படுகிறது. தமிழகத்தில் 5.02 லட்சம் எக்டேரில் எண்ணெய்வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையாகவும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் ஆமணக்கு சாகுபடியில் முன்னிலை வகித்து வருகிறது.தமிழகத்தில் ஆமணக்கு மானாவாரியாக பயிரிடப்படுகிறது. ஆண்டுதோறும் ஏப்ரலில் இருந்து ஆகஸ்ட் வரை ஆமணக்கு சாகுபடிக்கு உகந்தகாலமாகும். இதை பயிரிடுவதற்கு முன்பு நிலத்தில் பாத்தி அமைக்கவேண்டும். உரமும், நுண் ஊட்டமும், ஊட்டச்சத்து கலவையும் போதுமான அளவில் இருக்க வேண்டும். எந்தெந்த காலகட்டங்களில் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் கள அலுவலர்கரோடு ஆலோசித்து செய்ய வேண்டும். எண்ணெய் வித்துக்களில் ஆமணக்கைத்தான் பூச்சிகள் அதிகஅளவில் தாக்குகின்றன. இவற்றை கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அப்போதுதான் எதிர்பார்க்கும் மகசூலை பெறமுடியும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும் மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு மூலம் வெளியே கொண்டுவந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தத்தினால் தாய் அந்திப்பூச்சிகளை வெளியே வரவழைத்து கொல்லவேண்டும். பயிர்களில் பூச்சிகளின் முட்டை இருந்தால் அவற்றை மொத்தமாக சேகரித்து அழிக்க வேண்டும். பூச்சிகளின் தாக்குதலால்

பாதிக்கப்பட்ட வயல்களை சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டிமீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் தோண்டி பிறவயல்களில் பூச்சிபரவுவதை தடுக்க வேண்டும்.
எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் தெளிக்க வேண்டும். ஒரு எக்டேருக்கு சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 2.5 கிலோவுடன் 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சி தாக்குதல் இருக்காது. இல்லையேல் மகசூலை விவசாயிகள் இழக்கநேரிடும் என வேளாண்துறையினர் எச்சரித்துள்ளனர்.

**முட்டையில் உள்ள இரும்புச்சத்து தாய்சேய்க்கு ரத்தசோகை வராமல் தடுக்க உதவுகிறது சுகாதார அதிகாரி தகவல்**

புதுக்கோட்டை, : தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மற்றும் பொது சுகாதாரத்துறை சார்பில் கர்ப்பிணிகளுக்கான ஆரோக்கிய முட்டை வழங்கும் விழா மற்றும் தாய்சேய் நல மருத்துவ முகாம் நச்சாந்துப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று நடைபெற்றது. வட்டார மருத்துவ அலுவலர் ராணி கர்ப்பிணிகளுக்கு ஆரோக்கிய முட்டை வழங்கி முகாமை தொடங்கி வைத்தார். குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சியமளா முன்னிலை வகித்தார். முகாமில் மாவட்ட சுகாதார திட்ட அலுவலர் சுபாஷ்காந்தி தாய்சேய் நலம் காக்கும் கர்ப்பிணிகளுக்கான ஆரோக்கிய முட்டை எனும் தலைப்பில் பேசுகையில், கர்ப்பிணிகளுக்கு உணவில் முட்டை மிகவும் அவசியம். முட்டையிலுள்ள தரமான புரதம் சிசுவின் செல் வளர்ச்சிக்கு முக்கியம். முட்டையில் வைட்டமின் ஏ, பி, டி உள்ளிட்ட 12 வைட்டமின்களும், துத்தநாகம், செலினியம் போன்ற தாது உப்புகளும், ஒமேகா 3 கொழுப்பு அமிலமும் நிறைந்துள்ளன.
இவை கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சிக்கும், மூளை வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாதது. மேலும் கர்ப்பிணிகளுக்கான

சரிவிகித உணவில் தேவையான அளவு கொழுப்பு சத்து முட்டையில் கிடைக்கிறது. கர்ப்பக் காலத்தில் 200 முதல் 300 வரை கூடுதலான கலோரிகள் கர்ப்பிணிகளுக்கு தினமும் தேவைப்படுகின்றன. இதில் 70 கலோரிகள் முட்டையிலேயே கிடைக்கிறது.

இவற்றுடன் முட்டையில் உள்ள கோளின் குழந்தையின் மூளை தண்டுவட வளர்ச்சிக்கு பயன்படுவதோடு பிற்காலத்தில் ரத்த அழுத்தம், மன உளைச்சல் போன்ற மனநோய்கள் வராமல் தடுப்பதற்கு உதவுகிறது. முட்டையில் உள்ள இரும்புச்சத்து தாய் சேய்க்கு ரத்த சோகை வராமல் தடுக்கிறது. எனவே எளிதாகக் கிடைக்கும் முட்டைகளை வாங்கி கர்ப்பிணிகள் வேக வைத்து சாப்பிட்டால் கட்டாயம் தாய்சேய் நலம் காக்க முடியும் என்றார். இம்முகாமில் கலந்துகொண்ட 63 கர்ப்பிணிகளுக்கு டாக்டர் தமிழரசி மற்றும் செவிலியர்கள் தைனேஸ், சித்ரா, மேரி ஆகியோர் கொண்ட குழுவினர் பரிசோதனைகள் செய்து ஆரோக்கிய முட்டைகளும் வழங்கினர். சமுதாய சுகாதார செவிலியர் ரமணி நன்றி கூறினார்.